7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு, 1989 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஏ) அரசின் ஆணைகள், ஆவணங்களைத் தமிழில் தருதல்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எதுவும் விவகாரத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயத்தை நான் சொல்ல வரவில்லை. ஆங்கிலத்திலேயே அரசாங்கத்தினுடைய ஆணைகளும், ஆவணங்களும் இருக்கின்றன. நம்முடைய மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள், அவற்றைத் தமிழில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தால் உதவியாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கண்டிப்பாக வைக்கப் படும்.

10. வரவு-செலவுத் திட்டம், 1989-90, பொது விவாதம்—தொடர்ச்சி.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதில் பல